**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – பணியமைப்பு – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லத்தில் கூடுதலாக பணியமர்த்தப்பட்ட 43 பணியாளர்களுக்கு பின்னேற்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (டி) எண்: 56** **நாள்: 31.08.2018**
**விளம்பி – ஆவணி, 15**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (D) எண் 3, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 25.01.2017.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 1110/ம.இ.நிர்/2018, நாள் 19.07.2018 மற்றும் 02.08.2018.

------

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம் ஆகிய அலுவலகங்களில் தற்காலிகமாக நிரப்பப்பட்ட 136 பணியிடங்களுக்கு 01.07.2014 முதல் 31.12.2017 வரையிலான காலங்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேற்காணும் அரசாணையின்படி 136 பணியிடங்களுக்கு 31.12.2017 வரை ஊதியம் பெறுவதற்கு பணித்தொடராணை வழங்கப்பட்டது எனவும், அக்கால கட்டத்தில் பதவி உயர்வு, மாவட்ட ஆட்சியரின் தேர்வுக் குழு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆகியவற்றின் மூலம் பின்வரும் 43 பணியிடங்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார்:-

| | | |
|---|---|---|
| கண்காணிப்பாளர் | – | 8 |
| உதவியாளர் | – | 2 |
| இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் | – | 3 |
| சுருக்கெழுத்துத் தட்டச்சர் | – | 2 |
| காவலர் | – | 23 |
| அலுவலக உதவியாளர் | – | 2 |
| ஓட்டுநர் | – | 1 |
| செவிலியர் | – | 2 |
| **மொத்தம்** | – | **43** |

மேலும், மேற்கண்ட பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் காலிப்பணியிடங்களாக இருந்ததால், நிர்வாகக் காரணங்களுக்காகவும், நிர்வாகப் பணிகள் முழுமையாகவும், விரைவாகவும்

(த.பி.பா.)

செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தினால் மேற்படி 43 காலிப்பணியிடங்களில் பணிநியமனம் செய்யப்பட்டனர் என தெரிவித்துள்ளார். இனிவரும் காலங்களில் அரசின் முன்மொழிவு பெறாமல் எந்த ஒரு பணியிடமும் நிரப்பப்படமாட்டாது என உறுதிமொழியினையும் தெரிவித்து, கூடுதலாக நியமனம் செய்யப்பட்ட 43 பணியிடங்களுக்கு புத்தாக்க ஆணை (Revival Order) வழங்குமாறு அரசை கோரியுள்ளார்.

**3.** மேற்காணும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்று 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் மேல்பாக்கம் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஆகிய அலுவலகங்களில் உள்ள காலிப்பணியிடங்களில் அரசின் முன் அனுமதி பெறாமல் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரால் கூடுதலாக நிரப்பப்பட்ட மேலே பத்தி–2ல் குறிப்பிடப்பட்டுள்ள 43 பணியிடங்களுக்கு புத்தாக்க ஆணையும், மேற்படி மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் செயலுக்கு பின்னேற்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**4.** இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண் 45297/நிதி(சந)/2018, நாள் 30.08.2018–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:**

நிதித் (ச.ந.) துறை, சென்னை–9.
அரசுச் செயலரின் முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை–9
இருப்பு தணிக்கை அலுவலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.